எனது வாழ்க்கையே எனது செய்தி

# காந்தீயம்

ගාන්ධීයම

Gandheeyam

அகில இலங்கை காந்திசேவா சங்கத்தின் காலாண்டிதழ்

Publication of All Ceylon Gandhi Seva Sangam

Regd No.S.159 0f 25.08.1965

மலர் - 34 இதழ் 01 ஜனவரி - மார்ச் - 2022 விலை ரூபா 20/=

## கிளிநொச்சியில் காந்தியடிகளின் திருவுருவச்சிலை 152 ஆவது ஜெயந்தி தினத்தில் திறந்து வைக்கப்பட்டது

கிளிநொச்சி உருத்திரபுரம் 8ஆம் வாய்க்காலில் அமைந்துள்ள காந்தி நிலையத்தில் (காந்தி சிறுவர் இல்லம்) மகாத்மா காந்தி அடிகளின் திருவுருவச் சிலை காந்தி ஜெயந்தி தினத்தில் (02.10.2021) திறந்து வைக்கப்பட்டது.

காந்தி சிறுவர் இல்லத்தலைவர் கி.விக்னராஜா அவர்களின்தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் தலை வரும் மூத்த காந்தியவாதியுமான சோ.க.தம்பிப்பிள்ளை அவர்கள் காந்தி சிலையைத் திறந்து வைத்தார். நினைவுக் கல்லை யாழ் பல்கலைக்கழக மெய்யியல் துறைத் தலைவரும் சங்கத்தின் முன்னாள் தலைவருமான ந. சிவகரன் திரை நீக்கம் செய்தார். கிளிநொச்சி சின்மய மிசன் வதிவட ஆச்சாரியார். மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத் தலைவர், "காந்தீயம்" பத்திரிகை ஆசிரியர் மற்றும் சிறுவர் இல்ல நிர்வாகிகள், சங்க உறுப்பினர்கள் எனப்பலரும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர். இல்லச் சிறார்களின் கலை, கலாசார நிகழ்வுகளும் யோகாசனக் கண்காட்சியும் இடம் பெற்றன.













திரு.சோ.க. தம்பிப்பிள்ளை அவர்கள் மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்து காந்திமகானின் சிலையை திறந்து வைக்கிறார்.



திரு.ந. சிவகரன் அவர்கள் நினைவுக் கல்லை திரை நீக்கம் செய்வதையும் கிளிநொச்சி சின்மயமிஷன் ஸ்வாமி சிவேந்திர சைத்தன்யா. உடன் திருவாளர்கள் கி.விக்னராஜா. எம்.ஷாந்தன் சத்திய கீர்த்தி. சிவநேசன் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

**கடமையைச் சரிவரச் செய்யுங்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாகவியும் மகாத்மாவும்


ரவீந்திரநாத் தாகூர்

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்**
**வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"**

என்று பொய்யாமொழிப் புலவரான வான் புகழ் கொண்ட வள்ளுவர் கூறுகின்றார். இவரின் கூற்றுக்குப் பொருத்தமான இரு உத்தமர்களாக காந்திஜியும், குருதேவும் தெரிகின்றரர்கள். காந்தியடிகளும், தாகூரும் திறந்த நூலகங்கள், இவர்களின் வாழ்க்கை ஒரு திறந்த புத்தகம், உள்ளத்தில் உண்மை, பேச்சில் வாய்மை, செயலில் நேர்மை என வாழ்ந்து காட்டி சுவடுளை விட்டுச் சென்றுள்ளனர். 19ம் நூற்றாண்டிலும், 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் இந்தியப் பெருந்தேசத்தில் விளைந்த வித்துக்கள், சிறந்த இலட்சியவாதிகள் மற்றும் கல்விமான்கள். இருவருக்கும் கடவுள் மீதும் அசைக்கமுடியாத நம்பிக்கை இருந்தது. இருவரதும் வாழ்வின் உச்ச இலட்சியமாக இருந்தது இறைவனை அடைவது. ரவீந்திரநாத் தாகூரும் மகாத்மாகாந்தியும் தலைசிறந்த சிந்தனையாளர்களாக கருதப்பட்டார்கள். அவர்களுக்கிடையே சில கருத்து வேறுபாடுகள் காணப்பட்டாலும் பெருமதிப்புடன் கடைசிவரை நேசம் பாராட்டி வந்தார்கள்.

"வாழ்க நீ! எம்மான் . இந்த வையத்து நாட்டிலெல்லாம்
தாழ்வுற்று வறுமைமிஞ்சி விடுதலை தவறிக்கெட்டு
பாழ்பட்டு நின்ற தாமோர் பாரததேசந்தன்னை வாழ்விக்க வந்த காந்தி
மஹாத்மா நீ வாழ்க! வாழ்க!! என்கிறார்."

- தமிழகத்தின் தவப்பயனாகத் தோன்றிய மகாகவி பாரதியார். "மகாத்மா காந்தி" என்று அழைக்கப்பட்ட காந்தித்தாத்தா இந்திய விடுதலைப் போராட்டத்தை வெற்றிகரமாக நடாத்தி வெற்றிப்பெற்றதனால் இவர் "விடுதலை பெற்ற இந்தியாவின் தந்தை" என இன்றும் போற்றப்படுகிறார். "சத்தியாக்கிரகம்" என்று அழைக்கப்பட்ட இவரது அஹிம்சை வழிப்போராட்டம் இந்திய நாட்டு விடுதலைக்கு வழிவகுத்ததுடன் மற்ற சில நாட்டு விடுதலை இயக்கங்களுக்கு விதைவித்தாகக் காணப்பட்டது.

"மனம் அச்சமின்றி, தலை உயரமாக இருக்கும் இடத்தில்,
அறிவு இலவசமாக இருக்கும் இடத்தில் குறுகிய உள்நாட்டு சுவர்களால்
உலகம் துண்டுகளாக உடைக்கப்படவில்லை. சத்தியின் ஆழத்திலிருந்து
வார்த்தைகள் வெளிவருகின்றன"

எனத் தொடரும் வரிகளை, சிந்தனையாளர்களுக்கே உரிய தாடி, ஆடம்பரமில்லாத ஒரு தோற்றம், தீர்க்கமான கண்கள் என இந்தியாவின் முதல் நோபல் பரிசு வென்ற தாகூர், வழிமொழிகின்றார். பல இலக்கியவாதிகளும் தாகூரின் சிறுகதைகளை வியந்து பாராட்டிக் கொண்டிருக்கும் போது? தாகூர் தன்னை கவிஞராக அழைப்பதையே விரும்பினார். காதல், கோபம், விடுதலை, இழப்பு, தனிமை, சமயம், குழந்தை இலக்கியம் என்று தனது எல்லா உணர்வுகளையும் கவிதைகளாக வெளிப்படுத்தியுள்ளார். "இந்தியாவே விழிப்பாயிரு... உன்னுடைய தலை(மை) பணிவுடையதாக இருக்கட்டும் உன் விடுதலை ஆன்மாவின் விடுதலையாக இருக்கட்டும் என்றும் தன் உணர்வைப் பாடியிருக்கிறார். இந்தியாவின் தேசியகீதமான " ஜன கண மன" என்ற பாடலை இயற்றியவரும் இவரேயாவார்.

காந்தியடிகள் தென் ஆபிரிக்காவில் நடத்தி வந்த சத்தியாக்கிரகப் போராட்டத்தை தாகூர் கூர்மையாகக் கவனித்து வந்தார். 1915 ஆம் மார்ச்சுத் திங்கள் 6ம் நாளன்று சாந்தி நிகேதனில் முதன்முதலாகச் சந்தித்தனர். உராய்வுகளும் விரிசல்களும் அவ்வப்போது ஏற்பட்டாலும் ஒரு நீண்டகால நட்பின் தொடக்கமாக இச்சந்திப்பு அமைந்தது. காந்தி - வில்லிங்கடன் ஒப்பந்தத்தை இந்தியாவில் யாரும் ஆதரிக்கவில்லை. இந்தியா திரும்பிய சில நாட்களுக்குள்ளே மகாத்மா சிறையிலிடப் பட்டார். விரும்பத்தகாத கொள்கை என்று கூறித்தாகூர் இதனை எதிர்த்தார். நிலையான பகைமைக்கு இது காரணமாக அமையும் என்று


மகாத்மா காந்தி

எடுத்துரைத்தார். பூனாவில் உள்ள ஏர்வாடா சிறையில் காந்தியடிகள் சாகும்வரை உண்ணா விரத நோன்பை மேற் கொண்டார் என்ற செய்தி அறிந்ததும் தாகூர் அடிகள் ஒரு வாழ்த்துத்தந்தி அனுப்பினார். அடிகள் நோன்பினைக் கை விட்டதும் தாகூர் அங்கு சென்று அவரருகில் அமர்ந்து அடிகளின் வேண்டு கோளுக் கிணங்கி," நெஞ்சு உலர்ந்து கருகும் - போது பாடல்களைப் பாடியவாறே நீ வருவாயாக" எனவரும் கீதாஞ்சலிப் பகுதியைப் பாடிக் காட்டினார். நாடு பெரும் குழப்பத்தில் மூழ்கியிருந்த போதும் தம் இலக்கியப் பணியைத் தொடர்ந்திருந்த தாகூர் "அஞ்சலகம்" என்னும் நூலைப் படைத்தார். "ஜொராசாங்கோ (Jorasanko) மாளிகையில்" இந்த நாடகம் நடைபெற்றபோது அன்னிபெசன்ட், மோகனதாஸ் கரம்சந்த்காந்தி மற்றும் மதன்மோகன் மாளவிகா" ஆகியோர் அவையினரிடையே அமர்ந்திருந்தனர். "மகாத்மா" என்று காந்தியை அழைத்துப் போற்றியவர் "தாகூரே" காந்தியடிகள் தாகூரை "குருஜீ" என அன்பாக அழைப்பார். 1925 - ஆம் ஆண்டு மே மாதத்தில் மகாத்மா காந்தி சாந்தி நிகேதனுக்கு வருகைதந்தார். இராட்டையைப் பயன்படுத்துவது தொடர்பான கொள்கைகளைப் பற்றியும் நடைமுறைப் பயிற்சியைப் பற்றியும் நாட்டு நிலவரங்கள் பற்றியும் காந்தியும் தாகூரும் விவாதித்தனர்.

"மனிதாபிமானி காந்தி" என்ற தலைப்பில் தாகூர் 1938ல் எழுதிய கட்டுரையில் கீழ்க்கண்டவாறு புகழ்ந்துள்ளார்.

"காந்திஜி அரசியல்வாதி சிறந்த நிர்வாகி மக்களின் பெருந்தலைவர் தார்மிக சீர்திருத்தவாதி என்ற சிறப்புக்கள் ஒரு புறமிருக்க, இவற்றுக்கெல்லாம் மேலாக இவைசார்ந்த அன்னாரது நடவடிக்கைகள் எதுவுமே மானிட வர்க்கத்தின்பால் அவர் கொண்டுள்ள அன்பையும் அருளிரகத்தையும் கட்டுப்படுத்தவில்லை. மாறாக, அப் பேரன்பு அவரது அனைத்துச் செயல்பாடுகளுக்கும் உத்வேகம் அளிக்கிறது"

காந்திஜி தார்மிகம் செறிந்த அரசியல்வாதி ஆனால் தாகூர் அரசியலிலிருந்து விலகியே நின்றார் என்று சொல்வாருண்டு அது அவ்வளவு சரியல்ல. இந்திய சுதந்திரப் போராட்டத்தில் நேரடியாகப் பங்கு கொண்டதில்லை என்ற போதிலும் பிரித்தானிய அரசை எதிர்த்து நாட்டின் விடுதலையை ஆதரித்தார். இவர் தனது போர்க்குணத்தை, போராட்டத்தை ஓவியங்களின் மூலமாகவும், கேலிச்சித்திரங்களின் மூலமாகவும், எழுத்துக்கள், இரண்டாயிரம் பாடல்களின் மூலமாகவும் வெளிப்படுத்தினார். 1941 ஆகஸ்ட் 7 அன்று தாகூர் மறைந்ததையொட்டி மகாத்மா காந்தி வெளியிட்ட இரங்கல் செய்தியில் " ரவீந்திரநாத் தாகூரின் மரணத்தில் நாம் இந்தச் சகாப்தத்தின் மிகச்சிறந்த கவியை மட்டும் இழக்கவில்லை, அபரிமித மனிதாபிமானியையும் ஆர்வமிக்க தேசியவாதியையும் இழந்து விட்டோம்" என்று அஞ்சலி செலுத்தினார்.

காந்திஜின் தனிநபர் சத்தியாக்கிரகத்தில் ஈடுபடவிருந்த ஜவஹர்லால் நேரு கைது செய்யப்பட்டு அப்போது சிறையில் இருந்தார். தாகூர் மறைவு பற்றித்தமது அன்றைய சிறை டயரியில் நேரு இவ்வாறு எழுதினார்.

"காந்தியும் தாகூரும் ஒருவருக்கொருவர் முழுதும் மாறுபட்டவர்களாக இருப்பினும், நம் நாட்டில் தோன்றிய மகத்தான மனிதர் வரிசையில் அவ்விருவருமே இந்தியாவின் ஆன்மாவைப் பரதிபலிக்கின்றனர். ஏதோ குறிப்பிட்ட சீரிய பண்பு பொருந்தியவர்கள் என்றில்லாமல் இன்றளவில் உலகிலுள்ள சிறப்புமிக்க மாமனிதர்களின் பொதுத்தோற்றத்தில் காந்தியும் தாகூரும் தலைசிறந்தவர்கள் என்பதே உலகின் கணிப்பு.

**சோகினா கிருபாகரன்**
**உடுவில் மகளிர் கல்லூரி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காந்தீயம்

எனது வாழ்க்கையே எனது செய்தி

காந்தி ஆண்டு 152, ஜனவரி - மார்ச் 2022




மற்றவர்களைக் கெட்டவர்கள் என்று சொல்வதன் மூலம் நாம் நல்லவர்களாகி விட மாட்டோம்"

-மகாத்மா காந்தி-

## காந்தியச் சிந்தனை

காந்திய சிந்தனை என்பது காந்தியத் தத்துவங்களை அறிந்து கொள்ளும் வெறும் படிப்பு மட்டுமல்ல. அது அற, வாழ்வியல், ஆன்மீக மதிப்பீடுகளை உடையதாக விளங்குகின்றது. மானிடத்தை ஒளியிலிருந்து பேரொளிக்கு, வாழ்விலிருந்து பெருவாழ்விற்கு, உண்மையிலிருந்து பேருண்மைக்கு கொண்டு செல்ல காந்திய சிந்தனை உதவுகின்றது. இது நடைமுறைப் பிரச்சினைகளுக்கான தீர்வாக பிரயோகிக்கப்படக் கூடியது. மகாத்மா காந்தி ஓர் உயரிய தனிநபர் மட்டுமல்ல, அவர் ஒரு தொடர் இயக்கம். இயேசு, புத்தர் போன்று மகாத்மா காந்திக்கு முன்பே காந்திய தீபத்தை ஏற்றி காந்திக்கு முன்னோடியாக விளங்கியவர்களும் இருக்கிறார்கள். காந்திக்கு பிற்பட்ட காலங்களில் வினோ பாபாவே, ஜெயப்பிரகாஸ் நாராயண் போன்று காந்தியத்தை துலங்கச் செய்தவர்களும் இன்று காந்திய வழியில் தம் வாழ்வை அமைத்துக் கொண்டவர்களும் உலகம் முழுவதும் வாழ்ந்து வருகிறார்கள். காந்திய வழி தான் உலகம் உய்வதற்கான ஒரே மார்க்கம் என்பதை அனைத்து மக்களும் உணரும் காலம் எப்போது வருகின்றதோ அன்று தான் உலகில் நீடித்த நிலைத்த சமாதானம் மலரும். அது வரை போட்டியும், பூசல்களும், யுத்தமும் மலிந்த பூமியாகத் தான் இவ்வுலகம் இருக்கப் போகின்றது. உலகின் வல்லரசு நாடுகள் தமது ஆதிக்கத்தை உலகம் முழுவதும் செலுத்தும் பலப்பரீட்சையில் ஈடுபட்டு வருகின்றன. அணுஆயுதமும், நவீன ரக யுத்தக் கப்பல்களும், போர் விமானங்களும் ஒரு நாட்டின் பலத்தைத் தீர்மானிக்கும் காரணியாக இருப்பது ஆரோக்கியமான விடயம் அல்ல. எல்லா நாடுகளும் தமது படைப்பலத்தை பெருக்குவதிலேயே குறியாக உள்ளன. எப்போதும் எங்கும் படைகள் தயார் நிலையிலே வைக்கப்பட்டுள்ளன. யாருக்கு எதிராக எந்த நோக்கத்திற்காக யுத்தம் புரிவது என்று தெரியாமல் படைகள் பயிற்சிகளில் ஈடுபடுகின்றன. இராணுவத்தை வழி நடத்தும் அரசியல் தலைவர் களின் தவறான முடிவுகளாலும் ஆதிக்க வெறியாலும் பாதிக்கப் படுவது சாதாரண குடி மக்களேயாகும். ஆகவே நாட்டின் தலைவர்களும் காந்திய சிந்தனையின் பால் கவனம் செலுத்துவது அவசியமாகின்றது. கத்தியின்றி ரத்தமின்றி யுத்தத்தை நடத்திக் காட்டி மக்களுக்கு விடுதலை பெற்றுக் கொடுத்த காந்தியைப் பின்பற்றுவதே எதிர்காலத்திற்கு நன்மை பயக்கும்.

எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி
ஆசிரியர்.

## மகாத்மா காந்தி ஆசிரமம்

காந்திய சிந்தனையின் ஊடாக மக்களை விழிப்பூட்டுவதற்காக கிளிநொச்சி மாவட்டம் பூநகரி கிராஞ்சி கிராமத்தில் கடற்கரை ஓரத்தில் மகாத்மா காந்தி ஆசிரமம் உருவாகி வருகின்றது. காந்தி படிப்பகம், பனை ஓலை உற்பத்திக்கூடம், சேதனப்பசளை தயாரிப்பு, திருநீறு உற்பத்தி, இயற்கை வேளாண்மை ஆகிய விடயங்களை உள்ளடக்கி அதன் செயற்பாடுகள் ஆரம்பமாகியுள்ளன. ஒவ்வொரு வருடமும் காந்தி ஜெயந்தியை முன்னிட்டு தரிசு நிலங்களில் பனை விதைகள் நாட்டும் திட்டமும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. காந்திய தத்துவங்களின் மீது நம்பிக்கை கொண்ட அன்பர் சோ.க. தம்பிப்பிள்ளை அவர்கள் இதன் அறங்காவலராகச் செயலாற்றுகின்றார். இந்திய நாட்டைச் சேர்ந்த காந்திய அறிஞர்களும் துறைசார் வல்லுநர்களும் இம்முயற்சிக்கு தமது ஆதரவைத் தெரிவித்துள்ளனர். எதிர் காலத்தில் காந்தியப் பெரியார்கள் இங்கு வதிவிடப் பயிற்சிகளை வழங்கக் கூடிய வகையில் திட்டங்கள் வகுக்கப்படுகின்றன.

## மகாத்மா காந்திஜியின் சத்திய வழியில்......



கிளிநொச்சியில் 93 வது அகவையில் மிக எளிமையாக வாழும் காந்தீய நெறியே வாழ்க்கையாக கொண்ட பெருமதிப்பிற்குரிய பெரியார் திரு சோ.க.(S.K) தம்பிப்பிள்ளை ஐயா அவர்களை 152வது காந்தி ஜெயந்தி தினத்தில்(02.10.2021) வாழும் போதே வாழ்த்துவோம்.

1928 ல் காரைநகரில் பிறந்து. உயர் கல்விகற்று குருணாகலில் ஆசிரியப் பணியாற்றி கொழும்பில் அதிபர் பணிபுரியும் வேளையில் இலங்கை வானொலியில் பகுதிநேர அறிவிப்பாளராகவும் இலங்கைப் பாராளுமன்றத்தில் மொழிபெயர்ப்பாளராக 1961–1988 காலப்பகுதியில் உன்னத கடமையாற்றி ஓய்வுபெற்று ஆனால் ஓய்வில்லாது பூநகரி கிராஞ்சியில் மகாத்மா காந்தி ஆசிரமத்தில் முழுநேரமாக தன்னமற்ற காந்திசேவையையே வாழ்க்கையாக வாழும் புனிதராவார்.

1956ல் மேற்படி கிராஞ்சி மகாத்மா காந்தி ஆசிரமத்தை தமது சொந்த செலவில் அமைத்து அதனையும் அதனோடு அமைந்த சொத்துக்களையும் காந்தீய பணிக்களித்த பெருமகனாவார்.

**ஐயாவினது தற்போதய பணிகள்.**

1) கோமயத்திலிருந்து(பசுஞ் சாணத்திலிருந்து) தூய திருநீறு தயாரித்து ஆலயங்கள்,அன்பர்களுக்கு வழங்குதல்.
2) தென்னைப் பயிர்ச்செய்கையூடாகதூய தேங்காய் எண்ணெய் தயாரித்து ஆலயங்களுக்கு வழங்கி திருவிளக்கிடும் பணி.
3) பனை முதலான உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவித்து தனிமனித சமூக பொருளாதார வசதியினை மேம்படுத்தல்.
4) சாத்வீக உணவுப்பழக்கத்தினூடாக உடல்ஆரோக்கியத்தினை பேணுதல்.
5) பக்கவிளைவுகள் அற்ற இயற்கை மருத்துவமான நீர்,மண் சிகிச்சை முறைகளை அறிமுகம் செய்தல்.
6) பாடசாலைகளில் யோகாசனத்தை அறிமுகம் செய்தல்.
7) அகிம்சை எனும் ஆயுதத்தால் நிரந்தரமாக பிரச்சனைகளை முடிவிற்கு கொண்டுவரல்.(போர்காலத்திலும் அகிம்சையால் பல வெற்றிகளைப் பெற்றவர்)
8) இந்திய காந்தியவாதிகளை சுவாமிகளை இலங்கைக்கு அழைத்துவந்து சேவைகளை விரிவுபடுத்தல்.
9) எங்கும் இறைநாம ஜெபத்தை இறை பிரார்த்தனையை ஊக்குவித்தல்..சமய ஆன்மிக நிறுவனங்களுக்கு உதவுதல்.
10) ஆன்மிக ,காந்தீய பிரசுரங்களை பதிப்பித்து வழங்குதல்.
11) ...இன்னும் பல

காந்தீய நெறியில் தாம் தூய்மையாக வாழ்வதனூடாக ஏனையோருக்கு கவலையற்று வாழும் கலையை போதிக்கும் பெரியவரை வாழும் போதே வாழ்த்துவோம்.

போற்றுவோம்.போற்றி எல்லா உயிர்க்கும்.

**சின்மயாமிஷன், கிளிநொச்சி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காந்தியடிகளின் சாதி சமத்துவக் கொள்கையும் தீண்டாமை ஒழிப்பு செயற்பாடுகளும்



காந்தியடிகளின் இந்திய நிர்மாணத் திட்டத்தில் தீண்டாமை ஒழிப்பு அதிக முக்கியத் துவம் பெற்றிருந்தது. "மனிதர்கள் தங்க ளுடைய சகோதர மனிதர்களை அவமானப் படுத்துவதன் மூலம் தாங்கள் கௌரவிக்கப் படுவதாக எப்படி நினைக் கின்றார்கள் என்பது எனக்கு என்றுமே புரியாத மர்மமாக இருந்து வருகிறது" என்றார் மகாத்மா காந்தி மேலும் "பிறரை வெறுப்பதும், வன்முறையும் தனது அகராதியில் இல்லை" என்றார்.

காந்தியடிகள் தென்ஆபிரிக்காவில் இருந்து 1915 ஆம் ஆண்டில் இந்தியாவிற்குத் திரும்பினார். பின்பு இந்தியாவில் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டார். மக்களில் ஒரு பகுதியினர் மிகுந்த வறுமையினால் வாடுவதையும் சிலர் ஆடம்பர வாழ்வு வாழ்வதையும் கண்டார். அதிக உடல் உழைப்பின் மூலம் தமது வாழ்க்கையை தாழ்த்தப்பட்ட மக்கள் கொண்டு செல்வதைக் கண்டார். உயர்ந்த சாதியினரால் இவர்களின் உழைப்பு சுரண்டப்படுவதையும் கண்டார். அவர்களின் வாழ்வை வளம்படுத்த அதிக முயற்சியும் அகிம்சை வழிப்போராட்டமும் மேற்கொள்ளப்படவேண்டும் என உறுதிபூண்டார். தீண்டாமையை ஒழிப்பதன் மூலம் மக்கள் மத்தியில் ஏற்றத்தாழ்வு நீங்கி, போட்டி பொறாமை அற்ற ஒற்றுமையான சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்றும் இதனால் இந்தியவிடுதலைப் போராட்டத்தை இலகுவாக முன்னெடுத்துச் செல்ல முடியும் எனவும் கருதினார். அத்தோடு மக்கள் ஒற்றுமையாகச் செயற்படும்போது பொருளாதார வளர்ச்சியை காணமுடியும் என்றார்.

அடிமை முறை முற்காலத்தில் உலகம் முழுவதிலும் பல்வேறு சமூகங்களிடையே காணப்பட்டது. கைத்தொழிற்புரட்சியின் போது இயந்திரங்கள் அறிமுகமான பின் அடிமைமுறை நீங்கிவிட்டது. ஆனால் சாதி முறையும், சாதி அமைப்பும் தொடர்ந்தும் உள்ளது. இந்த சாதி முறையை ஒழித்துக்கட்டி சமத்துவமான சமூகத்தை மிளிரச் செய்ய வேண்டும் என்றும் அது இந்திய விடுதலைக்கும் விடுதலை பெற்றபின் தொடர்ந்தும் அமைதியான ஒற்றுமையான வளமிக்க நாடாக விளங்கச் செய்ய அவசியம் என்றும் அதற்காக சிந்தித்து காந்தியடிகள் செயற்பட்டார்.

காந்தியடிகளின் சமகாலத்தில் வாழ்ந்த அறிஞர் கலாநிதி B.R அம்பேத்கார் (1891 - 1956) மகாராட்டினத்தைச் சேர்ந்தவர். அங்கு தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர். அவர் " இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முன் சாதி முறை ஒடுக்கு முறையிலிருந்து ஒடுக்கப்பட்ட மக்கள் விடுதலை பெற வேண்டும் என்றும் அத்தோடு சாதிமுறையும் ஒழிக்கப்பட வேண்டும் என்றும் கூறினார்.

இந்தியாவில் இந்துக்களிடையே சாதி முறை வலுவாக காணப்படுகிறது. அக்கட்டுப்பாடுகளை இந்துக்கள் தகர்த்து விடவேண்டும் எல்லோரையும் சமமாக நேசிக்க வேண்டும். தாழ்த்தப் பட்டவர்களின் உயர்வுக்காக உயர் சாதியினர் உதவவேண்டும். தாழ்த்தப்பட்ட சாதி மக்களும் எம்மைப் போன்றவர்களே என்றார் மகாத்மா காந்தி.

இந்தியாவில் சாதிக் கொடுமை வரலாற்றுக்காலம் முதல் இருந்து வருகிறது. கௌதமபுத்தர், மகாவீரர், திருவள்ளுவர் ஆகியோரும் பின்பு இராமானுஜர், சுவாமி விவேகானந்தர், இராமலிங்க வள்ளலார், நாராயணகுரு, சுப்பிரமணிய பாரதியார் ஆகியோரும் சாதிமுறையை ஒழிக்க கருத்துக்களை வெளியிட்டும் செயற் பாட்டிலும் ஈடுபட்டனர். உலகப் பொது நீதி நூலை தந்தருளிய திருவள்ளுவரை அக்காலத்திலிருந்த அரசசபை அவர் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர் என்பதால் அவரை அங்கீகரிக்கவில்லை. காந்தியடிகள் குஜராத்தில் வாணிப (பனியா) சாதியை சேர்ந்தவர். இது அங்கு உயர்சாதியாக கருதப்பட்டது. தந்தையார் அங்குள்ள அரசசபையின் முதன் மந்திரியாக இருந்தவர். இந்த சூழலில் வாழ்ந்தாலும் அவர் ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை முறைகளைப் பார்த்து கவலை கொண்டார். அவர்களை உயர்த்தி விட வேண்டும் என்ற எண்ணம். அவரிடம் மேலோங்கியிருந்தது". "நம்மிற் பலர் கண்ணிருந்தும் குருடர்களாக , காதிருந்தும் செவிடர்களாக விருந்து நம்மைச் சுற்றியுள்ள சமூக அநீதிகளை கண்டு கொள்ளாதிருக்கும் அவலநிலை நிலவுகிறது" இந்நிலை மாறவேண்டும் என்றார் காந்தியடிகள். இந்துக்களை மதம் மாறும்படி கலாநிதி B.R அம்பேத்கார் அழைத்தார். ஆனால் காந்தியடிகள் மதமாற்றம் சாதி ஒழிப்புக்கு பொருத்தமற்றது என்றார்.

இராமாயணத்தில் கங்கை ஆற்றைக் கடக்க படகு ஓட்டியாக விருந்தவர் குகன். இவர் தீண்டத்தகாதவர். ஆனால் இராமபிரானை தனது படகில் ஏற்றி கங்கையின் அடுத்தகரையில் சேர்த்தார். இச்சம்பவம் காந்தியடிகளின் மனதில் ஆழத் தொட்டுவிட்டது. இந்த சம்பவம் இந்து மக்களிடையே "தீண்டத்தகாதவர்" என்ற எண்ணக்கரு மக்களிடமிருந்து நீங்காததற்கு காரணம் என்ன? என்ற சிந்தனை காந்தியடிகளுக்கு ஏற்பட்டது.முதற்தடவையாக இலண்டனுக்கு பிரயாணம் செய்ய தயாரான போது மோகன்தாஸ் காந்திக்கு அப்பிரதேச சாதி தலைவர்களினால் பிரயாணத்திற்கு தடையேற்படுத்தப்பட்டது.ஆனால் அவர்களின் தடையை மீறி இலண்டனுக்கு பிரயாணம் செய்வதாக இறுதி முடிவெடுத்தார். அவர், அவரின் உயர் சாதியில் இருந்து நீக்கம் செய்யப்பட்டார் அதன் பின் அவர் தீண்டத்தகாதவர் போல் நடத்தப்பட்டார். அப்போது சாதி ஒடுக்கு முறை யினால் ஏற்படக்கூடிய துயரங்களை அனுபவரீதியாக உணர்ந்தார்.

மேலும் பல சம்பவங்கள் காந்தியடிகளை இன சாதி பாகுபாடுபற்றி சிந்திக்க வைத்தன. தென்னாபிரிக்காவில் நேட்டாவின் தலைநகரான மாரிட்ஸ்பேக் புகையிரத நிலையத்தில் வெள்ளையர் பிரயாணம் செய்யும் முதலாம் வகுப்பு பெட்டியில் இருந்து பலவந்தமாக அவமானப்படுத்தப்பட்டு இறக்கி விடப்பட்டார். அதுமட்டுமல்ல. தென்னா பிரிக்காவில் சாள்ஸ்டவும் புகையிரதத்தில் இருந்து யொகனஸ் பேக் நகருக்கு குதிரை வண்டி (கோசியில்) பிரயாணம் செய்ய முற்பட்ட போது காந்தியை ஏற்ற மறுத்தார்கள். பின் இவரது மன்றாட்டத்திற்காக ஏற்றினார்கள். ஆனால் அவர்பட்ட துன்பம், துன்புறுத்தல், அவமதிப்பு என்பன அவரின் மனதை கலங்க வைத்தன. எனினும் தனது நோக்கத்தை அடைவதற்காக மீண்டும் தன்னை தைரியப்படுத்திக் கொண்டு தன் பிரயாணத்தை மேற்கொண்டார். யொகனஸ் பேக்கில் ஹோட்டலில் தங்குவதற்கு இடம் கேட்டபோது கறுப்பினத்தவர் என்பதால் அனுமதி மறுக்கப்பட்டது.

ஆபிரிக்க இந்தியர்களுக்காக டேர்பன் நீதி மன்றில் வாதாடசென்ற போது அங்கு நீதிபதி காந்தியை பார்த்து தலைப்பாகையை கழற்றுமாறு கூறும் போது அதற்கு மறுப்புத் தெரிவித்து நீதிமன்றை விட்டுவெளியேறினார்.

உயர் சாதி பரிஸ்டர் இவ்வளவு கஷ்டங்களையும் அனுபவிக்க நேரிடுமாயின் தாழ்த்தப்பட்ட சாதியினர் எவ்வளவு துன்பங்களை அனுபவிக்க நேரிடும் என்று அவர் சிந்தித்தார்.

சாதி ஒடுக்கு முறையை முற்றாக தகர்த்தெறிய வேண்டும் என்ற ஆழமான மனப்பதிவு ஏற்பட்டது. "அத்தோடு கடையவரின் நலன் முதலில்" என்ற ஜோண் ரஸ்கினின் நூலும் இவரின் பாரிய மனமாற்றத்திற்கு காரணமாகவிருந்தது.

எந்த விடயங்களிலும் இலட்சியம் இருந்தால் மட்டும் போதாது

(தொடர்ச்சி 5ம் பக்கத்தில்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபத்தில் கை, கால் செயல் இழந்த போதும்
# காந்தியின் கொள்கையை பரப்ப
# சக்கர நாற்காலியில் பயணத்தை தொடர்ந்த பெண்



சக்கர நாற்காலியில் அமர்ந்து லட்சிய பயணத்தை தொடர்ந்த சித்ராவையும், உடன் நடந்து செல்லும் அவரது கணவர் கருப்பையாவையும் படத்தில் காணலாம்.

விபத்தில் கை, கால் செயல் இழந்த போதும் காந்தியின் கொள்கையை பரப்ப பெண் ஒருவர் சக்கர நாற்காலியில் பயணத்தை தொடங்கியுள்ளார்.

**காந்திய தம்பதி**

மதுரையை சேர்ந்தவர் கருப்பையா (வயது 57) இவருடைய மனைவி சித்ரா (58) காந்திய கொள்கையில் பெரும் ஈடுபாடு கொண்ட இவர்கள் இந்தியா முழுவதும் பயணம் செய்து காந்தியின் கொள்கைகளை பரப்பி வருகிறார்கள். மேலும் அகில இந்திய காந்திய இயக்கத்தின் தேசிய ஒருங்கிணைப்பாளர்களாக உள்ளனர்.

குஜராத், பீகார், ஒடிசா, காஷ்மீர், பஞ்சாப், வாகா என இந்தியாவின் பல்வேறு பகுதிகளுக்கு நடை பயண மாகவும், சைக்கிளிலும் சென்று கடந்த 31 ஆண்டுகளாக இந்த லட்சிய பயணத்தை தொடர்கிறார்கள்.

**நாய்கள் கடித்தன**

இந்நிலையில் கடந்த ஆகஸ்டு மாதம் 15ந் தேதி சுதந்திர போராட்ட தியாகிகளுக்கு சமர்ப்பண யாத்திரை என்ற பெயரில் ஒரு நடை பயணத்தை ஈரோடு மாவட்டம் சென்னி மலையில் தொடங்கினார்கள். கடந்த செப்டம்பர் மாதம் 11ந் தேதி பாரதியார் நினைவு நாள் அன்று புதுச்சேரியில் இந்த பயணம் முடிவதாக இருந்தது.

ஆகஸ்டு 24ந் தேதி நாமக்கல் மாவட்டம் நாமகிரிப் பேட்டையில் சென்ற போது சித்ராவை நாய்கள் கடித்து விட்டன. அப்போது கீழே விழுந்து படுகாயம் அடைந்த சித்ராவுக்கு ஒரு கையும், காலும் செயல் இழந்தன. இதையடுத்து கோபி அருகே உள்ள ஓடத்துறை கிராமத்தில் தன்னுடைய பாட்டியின் வீட்டில் தங்கி சிகிச்சை பெற்று வந்தார்.

**சக்கர நாற்காலியில்...**

விபத்தில் பெரும் சோதனையை சந்தித்த போதும் மீண்டும் காந்திய கொள்கை பயணத்தை இந்த தம்பதி தொடர முடிவு செய்தார்கள். அதன்படி விழுப்புரம் வரை காரில் கருப்பையாவும், சித்ராவும் சென்றார்கள். பின்னர் அங்கிருந்து புதுச்சேரிக்கு நடைபயணத்தை தொடர்ந்தார்கள். கை,கால் செயல் இழந்த சித்ரா சக்கர நாற்காலியில் அமர்ந்து செல்ல, கருப்பையா உடன் நடந்து சென்றார். அவர்களை ஓடத்துறை ஊராட்சி தலைவர் பாலமுருகன் பொன்னாடை போர்த்தி வழியனுப்பி வைத்தார்.

பணத்தை நோக்கி பயணப்பட்டு, நின்று மூச்சு விட நேரமில்லாமல் ஓடுபவர்களுக்கு மத்தியில் காந்தியின் கொள்கைகளை சிரமப்பட்டு சுமந்து செல்லும் இந்த தம்பதியை பலரும் பாராட்டி வருகிறார்கள்.

நன்றி: தினத்தந்தி 09.12.2021

4ம் பக்கத் தொடர்ச்சி...



அவற்றை சரியான வழி முறையில் அடைவதே முக்கியம் என்றார் காந்தியடிகள். சாதி ஒழிப்பை வெறுப்பு, வன்முறையால் தீர்க்க முடியாது. மனமாற்றமே பொருத்த மான வழி என்றும். இணங்கச் செய்தல், பிரார்த்தனை, அன்பு, கல்வி , அகிம்சை, சட்டம் முதலிய வழிமுறைகளால் சாதி வேறுபாடுகளை நீக்க முடியும் என்றும் தாழ்த்தப்பட்டவர்களும், இந்துக்களும் சமூக, பண்பாட்டு, பொருளாதார உளவியல் ஆகிய விடயங்களில் முன்னேற்றகரமான மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் எனவும், கலப்புத்திருமணத்தை வரவேற்பதாகவும் காந்தியடிகள் வலியுறுத்தினார். சாதி ஒழிப்புக்காக காந்தியடிகள் மேற்கொண்ட நடவடிக்கைகளில் சில கீழே குறிப்பிடப்படுகிறது.

1. திருவாங்கூரில் பொது வீதியினூடாகச் செல்வதற்கு தீண்டத் தகாதவர்களுக்கு அனுமதி இல்லாதிருந்த நிலையில் 1924ஆம் ஆண்டு காந்தியடிகளும் அவர்களின் தொண்டர்களும் நடத்திய அகிம்சைப் போராட்டத்தின் காரணமாக இவ்வீதி சகலருக்கும் திறந்துவிடப்பட்டது.
2. பொதுக்கிணறுகளில் நீர் பெறுவதற்கிருந்த தடை நீக்கப்பட்டது.
3. சம பந்தி போசனத்தை ஏற்படுத்தி அதனை தொடரும்படி வேண்டிக்கொண்டார்.
4. செல்லுமிடமெல்லாம் மக்களின் மனமாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் உரையாற்றுவார். தாழ்த்தப்பட்டவர்கள் கடவுளின் பிள்ளைகள் அவர்களை சமமாக ஏற்றுக் கொள்ளுங்கள் என்று உயர்சாதியினருக்கு வேண்டுகோள் விடுத்திருந்தார். அதனால் பலரின் மனம் மாற்றமடைந்துள்ளன. அதனை ஏற்று தாழ்த்தப்பட்ட வர்களை சமமாக ஏற்க ஆரம்பித்தனர்.
5. பெரும்பாலான அரசியல் தலைவர்கள் உயர் சாதியைச் சேர்ந்த வர்கள். அவர்களை சமூக செயற்பாடுகளில் ஈடுபடுத்தும் போது தாழ்த்தப்பட்டவர்களின் உயர்வுக்கும், சாதி சமத்துவத்தை ஏற்படுத்து வதற்குமாக செயற்பட வைத்தார்.
6. ஹரிஜன் பத்திரிகை மூலம் பாகுபாடு காட்டுவது அநீதியானது என்பதை கட்டுரைகள் மூலம் மக்களுக்குத் தெரிவித்தார்.மக்களை மனமாற்றம் செய்தார்.
7. சுற்றுப்பயணங்களின் போது தாழ்த்தப்பட்டவர்களின் மத்தியிலேயே தங்கி போதனைகள் செய்வார். சுகாதார வாழ்வு பற்றி அதிகம் கூறி தானே அழுக்கான இடங்களைச் சுத்தப்படுத்துவார்.
8. காங்கிரஸ் கட்சியை தீண்டாமை ஒழிப்புக்காக முழுமையாக பயன்படுத்தினார்.
9. கலாநிதி B.R. அம்பேத்காருடன் இணைந்து அரசியல் ரீதியாக சட்ட ஏற்பாடுகளை மேற்கொண்டு தேசிய மட்டத்தில் சாதிக் கொடுமைக்கு விமோசனம் வழங்கினார்.
10. ஆச்சிரமத்தில் தொண்டர்கள் சாதி வேறுபாடின்றி உபசரிக்கப் பட்டனர்.

சாதி முறைமையால் சமூகத்தில் இன்றுள்ள நிலமை ஏற்பட்டதற்கு நாமே பொறுப்பாளிகள். எனவே நாம் அவர்களுடன் உண்மையாக நடந்து கொள்வதோடு அவர்களிடம் எத்தனை குறைகள் இருப்பினும் அவர்களை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். அவர்களும் எம் சகோதரர்களே என்ற உணர்வுடன் அவர்களை ஏற்கும்போது அவர்களும் மகிழ்வுடன் தங்களை மாற்றிக் கொள்வார்கள். மேலும் அவர்களின் ஆற்றல்களுக்கு மதிப்பளிப்பதும் வறுமையை போக்குவதும் முக்கியமான தேவையாகவுள்ளது.

"அடுத்தபிறப்பு எனக்கு கிடைக்குமாயின் நான் ஹரிசன குடும்பத்தின் மத்தியில் பிறக்கவேண்டும் என்று விரும்புகின்றேன்" என்று அவர் உருக்கமாகக் கூறினார்.

க.செல்வக்குமாரன் M.A
ஓய்வுநிலை அதிபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காந்திய வழி மூலம் தான் மக்களின் பிரச்சினைகளை வெளிக்கொணர முடியும்.
### -அகில இலங்கை காந்திசேவா சங்கத்தலைவர் தெரிவிப்பு-



மக்களிடையே கருத்துப் புரட்சியை உருவாக்குவதற்கு காந்தி சங்கங்களை வலுவாக்குவது தான் ஒரே வழி. காந்திய அணுகுமுறையின் ஊடாகவே மக்களின் பிரச்சினைகளை வெளிக் கொணர முடியும். இவ்வாறு அகில இலங்கை காந்தி சேவா சங்கத் தலைவர் திரு.சோ.க.தம்பிப்பிள்ளை தெரிவித்தார். அண்மையில் இடம்பெற்ற சங்கத்தின் இன்றைய செயற்பாடுகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டத்திலேயே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

கிராமத்தில் மக்களிடம் ஒரு தென்னையின் பெறுமதி எவ்வளவு என்று கேட்டேன். சற்று யோசித்தார்கள். நான் ஒரு லட்சம் ரூபாய் என்றேன். ஆ.......... அப்படியா என்றார்கள். தென்னை, பனை மரங்களின் பெறுமதியை உணராதவர்களாக மக்கள் உள்ளார்கள். பனை - தென்னையின் பயன்களை மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும். நகரத்திலிருந்து கிராமத்திற்கு பேருந்தில் வரும் போது எல்லோரும் பிளாஸ்ரிக் பாய்களுடன் வருகிறார்கள். பனை அதிகம் உள்ள கிராமங்களில் ஓலைப் பாய் கைத்தொழிலை விருத்தி செய்தால் பலருக்கு வருமானம் கிடைப்பதோடு எமது ஆரோக்கியமான வாழ்க்கைத் தேவையும் பூரணமடையும். காந்தி ஜெயந்தியை முன்னிட்டு பனை நடுகைத்திட்டத்தை செயற்படுத்தத் தொடங்கியுள்ளோம். எதிர்காலத்தில் பூநகரி பிரதேச சபையின் உதவியுடன் 1000 பனை நடுகைத் திட்டத்தை செயற்படுத்த உத்தேசித்துள்ளோம். பஞ்சம், பட்டினி வரப்போகின்றது என்று கூக்குரல் இடாது சேதனப்பசளை தயாரித்து இயற்கை வேளாண்மையில் ஈடுபட வேண்டும். எங்கள் கிராமங்களில் அதற்கான சகல வளங்களும் இருக்கின்றன.

காந்தி இயற்கையை நேசித்ததோடு மக்களையும் நேசித்தார். அவர் ஒரு சிறந்த ஆன்மீகத் தலைவராகவும் தேசியத்தலைவராகவும் விளங்கினார். இன்று எமக்கு ஒரு வலுவான ஆன்மீகத் தலைவரும் ஒரு வலுவான தேசியத் தலைவரும் தேவை. நான் ஒவ்வொரு நாளும் வேலை தொடங்குவதற்கு முன்னர் தம்மபதம், பகவத்கீதை இரண்டையும் படிப்பேன். புத்தரையும் காந்தியையும் வைத்து வழிபாடு செய்கின்றேன் என்றார்.

## காந்திஜெயந்தி தின நிகழ்வுகள் 02.10.2021



அரியாலை காந்தி சிலையடியில்...





யாழ்ப்பாணம் காந்தி சிலையடியில்...

## நூல் அறிமுகம்
### - எல்லாம் செயல்கூடும்-



மகாத்மா காந்தியின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, தங்கள் வாழ்வையே சமூக சேவைக்காக அர்ப்பணித்துக் கொண்டவர்கள் ஏராளம். அவர்களில் புகழ் வெளிச்சம் படாத சிலர் உள்பட 15 ஆளுமைகளைத் தேர்ந்தெடுத்து, அவர்களின் சேவைகளை அங்கீகரிக்கும் விதமாக இந்த நூல் ஆக்கப்பட்டு இருக்கிறது. தாழ்த்தப்பட்டோர் பிரிவில் இருந்து தமிழகத்திலேயே பட்டம் பெற்ற முதல் பெண் மணி கிருஷ்ணம்மாள், இறால் பண்ணை ஒழிப்பு போராட்டத்தில் முக்கிய பங்கு வகித்த ஜெகந்நாதன், கதர் துணி விற்பனைக்கு பாடுபட்ட கே.வைத்தியநாதன், தாழ்த்தப்பட்டவர்களின் உரிமைக்காகப் போராடிய கிருஷ்ணசாமி போன்றவர்களின் தியாக வரலாறு இன்றைய சமுதாயத்தினரின் மனதில் ஆழப்பதியும் வகையில் சிறப்பாக தொகுத்துத் தரப்பட்டு இருக்கிறது.

(ஆசிரியர்: பாவண்ணன், வெளியீடு: சந்தியா பதிப்பகம், 77, 53 வது தெரு, 9வது அவெனியூ, அசோக்நகர், சென்னை – 83)

நன்றி - தினத்தந்தி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மோ. கரம் சந்த் காந்தி

கட்சிபேதம் கடுமை காழ்ப்புணர்ச்சி இல்லாதவர் காந்தி – பொய்க்
கடல் வலையத்துள் மூழ்கி பொருளெதனையும் கொள்ளாதவர் காந்தி
பட்சம் பரிவு பாங்கு பரோபகாரம் குன்றாதவர் காந்தி – பிறர்
பரம ஏழைகளைப் பந்தாட பொறுமை காக்காதவர் காந்தி

சனங்களைப் பாதித்த சட்டதிட்டத்தை ஏற்காதவர் காந்தி – அதன்
சதிவலையில் குடிகள் சிக்கித் தவிக்கவிடாதவர் காந்தி
இனமதப் பூசல்தன்னால் உயிரிழப்பை ஒவ்வாதவர் காந்தி – பேர்
இடுக்கண் சூழினும் இறைமேற்பழி போடாதவர் காந்தி

தன்மானப் பறிப்பிலும் தலைப்பா கழற்றாதவர் காந்தி – தவறின்
தனையனாயினும் விசாரிப்பின்றித் தப்பிக்க விடாதவர் காந்தி
அன்னையப்பர் அறிவுரை அலட்சியஞ் செய்யாதவர் காந்தி – எங்கு
அடியுதை பட்டாலும் அகிம்சையைக் கைவிடாதவர் காந்தி

உண்மையைத் தவிர வேறொன்றையும் ஆராதிக்காதவர் காந்தி – கதர்
உடையிலும் எளிமையுல்லாத வேறெதையும் உணர்த்தாதவர் காந்தி
வண்மைக்காக இல் தனக்கென எதையும் வைப்பிலிடாதவர் காந்தி – பிலுக்கு
வாழ்வான்மீகரைப் பாதிக்கு மாதலினதை விரும்பாதவர் காந்தி

மக்கட்கண் வளர்தீதில் அணுவும் காணப்பெறாதவர் காந்தி – நன்
மனிதரை ஏமாற்றிப் பிழைத்து ஏற்ற மடையாதவர் காந்தி
அக்கம்சார் இயற்கை வளம் தன்னை அழித்தொழிக்காதவர் காந்தி – உற்ற
ஆர்வலரைச் சுரண்டியுண்டு அநீதி யிழைக்காதவர் காந்தி

உயர் பொருள் பொதியாதஎக் காரியமும் ஆற்றாதவர் காந்தி – பாரில்
உன்னத சக்தியாம் அபலையை உதைத் தொதுக்காதவர் காந்தி
அயலான்இந்து கிறித்தவற்கு இணையிலையா எனக்கேட்டவர் காந்தி – நிகரில்
பொதுநல வாழ்க்கையைத் துறந்து பிதற்றித்திரியாதவர் காந்தி

ஒளிவுமறை வாகஎவ் விடயத்தையும் ஓதாதவர் காந்தி – கையில்
ஒன்றும் வருவாய்க்கு மேல்வாழ்ந்து உருக்குலையாதவர் காந்தி
பழிபவச் சேற்றுடன் பகவத் கீதையைப் பாடாதவர் காந்தி – அதில்
பகரப்பட்ட போதனையைப் பனுவலெதிலும் பார்க்காதவர் காந்தி

பழஉணவு புலால் உணவென்பதனை ஆமோதிக் காதவர் காந்தி – தாய்ப்
பால் உணவு புலால் என்றுரைத்திடவும் பீதி கொள்ளாதவர் காந்தி
பழகியோர் தன்பொருட்டுச் சிரமப்படுவதைத் தாங்காதவர் காந்தி – நித்தப்
பட்டினிச் சாவின் பெரும் பயங்கரத்தைச் சகிக்காதவர் காந்தி

*கவிஞர் மணிமன்றன்,*
*யாழ்ப்பாணம்*

# கண்ணீர் அஞ்சலி



**தோற்றம்**
**26 – 10 – 1972**

**மறைவு**
**22 – 12 – 2021**

கந்தர்மடத்தை பிறப்பிடமாகவும்
யாழ்ப்பாணம் 4ம் குறுக்குத்தெருவை தற்காலிக
வசிப்பிடமாகவும் கொண்ட
எமது சங்கத்தின் உறுப்பினர்

**அமரர்**
## மருதலிங்கம் சுஜீவன்

அவர்களின் பிரிவை முன்னிட்டு அன்னாருக்கு
எமது ஆழ்ந்த அஞ்சலியைத் தெரிவிப்பதுடன் அவரின்
குடும்பத்தினருக்கு எமது ஆறுதலையும்
கூறுகின்றோம்.

**அகில இலங்கை காந்தி சேவா சங்கம்**

# 74 ஆவது காந்தி நினைவு தினம்

மகாத்மா காந்தியடிகளின் 74 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு அகில இலங்கை காந்தி சேவா சங்க நிர்வாகிகள் இன்றைய தினம் (30.01.2022) வடக்கு மாகாணத்தில் காந்தி திருவுருவச் சிலைகள் அமைந்துள்ள யாழ்ப்பாண நகரம், அரியாலை, கிளிநொச்சி காந்தி நிலையம், பருத்தித்துறை, முல்லைத்தீவுஆகிய இடங்களில் மலர் அஞ்சலி செலுத்துவர். நினைவுப் பிரார்த்தனையும் இடம்பெறும். "காந்தீயம்" பத்திரிகையும் மேற்படி இடங்களில் வெளியிட்டு வைக்கப்படும்.

## கிருஷ்ணம்மாள் ஜெகன்னாதன் இந்திய ஜனாதிபதியால் கௌரவிக்கப்பட்டார்



**சர்வோதய போராளி வயது 95. வாழ்நாள் முழுவதும் தனது கணவர் சர்வோதயத் தலைவர் ஜெகன்னாதன்ஜியுடன் சேர்ந்து கடைக்கோடிமக்களின் முன்னேற்றத்திற்காக போராடிக்கொண்டிருக்கும் சர்வோதய இயக்கம் தந்த மாமணி கிருஷ்ணம்மாள் ஜெகன்னாதன்.**

**தகவல் உதவி:**
**திரு. ராஜேந்திரன்**
**சர்வோதய மண்டல்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**காந்தி ஜெயந்தியன்று சூம் செயலி ஊடாக நடைபெற்ற நிகழ்நிலைக் கருத்தரங்கின் நிகழ்ச்சி நிரல். இந்நிகழ்வில் சுமார் 200 பேர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.**

Department of Philosophy , University of Jaffna & All Ceylon Gandhi Sewa Sangam Cordially Invite You to the Celebration of

## 152nd Gandhi Jayanti & International Day of Non - Violence 2021

**Agenda**

**On Saturday**
**2nd of October , 2021**
**7.00 pm to 9.00pm**

| | | |
|---|---|---|
| 7.00 pm | - | Welcome by the Moderator |
| 7.02.pm | - | Welcome Address by student Representative |
| 7.05pm | - | Gandhiji's Favourite Bhajans (Devotional Song) by Student Representative |
| 7.07pm | - | Blessing Message by prof S.Srisatkunarajah , Vice chancellor, University of Jaffna. |
| 7.15 pm | - | Blessing Message by prof K.Suthakar, Dean, Faculty of Arts |
| 7.25pm | - | Release of Gandeeyam Magazine |
| 7.30pm | - | Chief Guest Address by Hon. Raakesh Nadraj Jeyabaskaran, Consulate General of India, Jaffna, Sri Lanka |
| 7.40pm | - | Relevance of Gandhian Ideology in 2st Century. - Izrath Yaasmin, First year Student |
| 7.55pm | - | Mahandma Gandhiji's Environmental perspective - Pavithra, First year Student |
| 8.10 pm | - | Keynote Address by Dr.Aru Thirumurugan - Mahadma Gandhiji's Jaffna Visit & SocialChange |
| 8.55 pm | - | Vote of Thanks by M Shanthan Sathiakeerthy, Editor "Gandeeyam" Former General Secretary All Ceylon Gandhi Sewa Sangam. |

# கூட்டுப் பசளை தயாரிக்கும் படிமுறை

1. 3 அடி அகலம், 10அடி நீளம், 6அடி உயரம் போன்ற அளவு களில் கூட்டுப்பசளை காணப்பட கூடியவாறு வடிவமைத்து கொள்ள வேண்டும்.
2. பின்னர் கூட்டுப் பசளை தயாரிக்கும் இடத்தில் நிலத்திற்கு கீழாக சற்று ஆழப்படுததி இரண்டு அடுக்குகளில் தேங்காய் உரி மட்டையினை அடுக்கிக் கொள்ள வேண்டும்.
3. பின்னர் பண்ணைக் கழிவுகள், அதற்கு மேல் இலை குழைகள், அதன் மேல் வைக்கோல் அதன் மேலே சாணக்கரைசல் தெளித்தல். போன்ற படிமுறைகள் செய்தல் வேண்டும்.
4. இவ்வாறு 6 அடி உயரம் வரும் வரை இவ் ஒழுங்கில் பண்ணைக் கழிவுகளை சேர்த்தல் வேண்டும்.
5. 6 ஆடி உயரம் வரை வந்த பின்னர் சாணகத்தினால் மெழுகிக் கொள்ள வேண்டும்.
6. இச் செயற்பாடுகள் முடிந்த பின்னர் தொடர்ந்து நீர் தெளித்தல் வேண்டும்.
7. 15 தொடக்கம் 20 நாட்களின் பின்னர் கூட்டெருக் குவியல் சற்று கீழ் இறங்கி விடும் அப்போது மேலும் பல அடுக்குகளில் (6அடி உயரம் வரை) பண்ணைக் கழிவுகளை சேர்த்துக் கொள்ள வேண்டும். தொடர்ந்தும் குவியலை ஈரமாக வைத்திருத்தல் வேண்டும்.
8. மூன்று முதல் நான்கு மாதங்களின் பின்னர் நல்ல மணமுள்ள பழுப்பு நிறப்பசளை கிடைக்கும்.
9. கூட்டெரு பயன்படுத்தும் வரை நீ தொடர்ந்தும் ஈரமாக வைத்திருத்தல் வேண்டும்.
10. இவ்வாறு தயாரான கூட்டுப்பசளையை பயிர்ச் செய்கைக்கு பயன்படுத்தலாம்.

இவ்வாறு சேதனப் பசளையை தயாரித்து கிராஞ்சி, பிருந்தாவனம் தோட்டத்தில் பயன்படுத்தி வருகின்றோம். இதனுடைய பெறுபேற்றினை காலக் கிரமத்தில் தெரியப்படுத்துவோம்.

**தாளாண்மைப் பண்ணையம்**
**பாஸ்கரன் டில்க்சன்**
**தொலை இல: 076 5893 690**

# மகாத்மா கிராமத்தில் மாலை நேரக் கல்வி

வடமராட்சி,பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அல்வாய் வடக்கு மகாத்மா கிராமத்தில் மாலை நேரக் கல்வித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. நாம் செய்வோம் அமைப்பு அனுசரணையில் சமூக விஞ்ஞான ஆய்வு மையத்தால் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

மாணவர்களின் சுய கற்றலை ஊக்குவிக்கும் நோக்குடன், ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தக்கல்வித்திட்டம் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்து தினமும் மாலை 4.00 மணி முதல் 6.00 மணி வரை இடம்பெறும் என்று ஏற்பட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நன்றி - "உதயன்"

**அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் பணிகளுக்கு நிதி உதவி செய்ய விரும்பும் அன்பர்கள் சங்கத்தின் வங்கிக் கணக்குக்கு அனுப்பி உதவுக.**



அகில இலங்கை காந்தி சேவா சங்கம்
சேமிப்புக் கணக்கு இலக்கம் : 117599
இலங்கை வங்கி
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை D8 உருத்திரபுரம், கிளிநொச்சியிலுள்ள அகில இலங்கை காந்தி சேவா சங்கத்திற்காக திரு. சோ. க. தம்பிப்பிள்ளை அவர்களால் யாழ்ப்பாணம், கே.கே.எஸ் வீதி, இலக்கம் 717இல் அமைந்துள்ள தீபம் பதிப்பகத்தில் 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
இதழாசிரியர் : எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி B.F.A, PGDE, Dip.in Community Development& Management, M.A(Gandhian Thought), M.Ed

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org